தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை

வியாழக்கிழமை, 1981 பிப்ரவரி 26

2012 திருவள்ளுவர் ஆண்டு, ரௌத்திரி ஆண்டு, மாசித் திங்கள் 15 ஆம் நாள்.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 11-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"கொல்லா நலத்தது நோன்மை பிறர் தீமை
சொல்லா நலத்தது சால்பு."

ஓர் உயிரையும் கொலை செய்யாத அறத்தை அடிப்படையாகக் கொண்டது தவம். இதைப்போல பிறருடைய தீமையை எடுத்துச் சொல்லாத நற்பண்பை அடிப்படையாகக் கொண்டது சால்பு.

1. இரங்கல் குறிப்பு

முன்னாள் உறுப்பினர் திரு. இரா. நாராயணன் மறைவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. இரா. நாராயணன் அவர்கள் 1981 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 13 ஆம் தேதியன்று மறைந்ததை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. நாராயணன் அவர்கள் 1962 ஆம் ஆண்டிலிருந்து 1967 ஆம் ஆண்டு வரை திருச்சிராப்பள்ளி மாவட்டம் அரியலூர் தொகுதியிலிருந்தும், மற்றும் 1967 ஆம் ஆண்டிலிருந்து 1971 ஆம் ஆண்டு வரை திருச்சிராப்பள்ளி மாவட்டம் வரகூர் தொகுதியிலிருந்தும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும் அனுதாபத்தையும் இரங்கலையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கை எய்தியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடம் மவுனமாக எழுந்து நின்றனர்.)

குறிப்பு:—*ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.